சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | சித்ரா |
| கணவர் பெயர் | : | செந்தமிழ்செல்வன் |
| கிராமம் | : | வலங்கைமான் |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | தலைமை மருத்துவர்,<br>வலங்கைமான் |
| வயது | : | 58 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகவில்லை,

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது வலங்கைமான் அரசு மருத்துவமனையில் தலைமை அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது மருத்துவமனைக்கு கடந்த 01.01.2025 ஆம் தேதி இரவு 1.30 மணியளவில் வலங்கைமான் தாலுக்கா, விடையல் கருப்பூர், விச்சூர் கிராமம், தெற்கு தெருவை சேர்ந்த அன்பழகன் மகன் அ.சா-1 அபிகண்ணன் மற்றும் அதே ஊரை சேர்ந்த சம்பத் மகன் அ.சா-2 சஞ்சை ஆகியோர்கள் கட்டையால் அடித்து தாக்கியதாக கூறி தலையில் அடிப்பட்டு சிகிச்சைக்காக வந்தார்கள். அவர்களை இரவில் பணியிலிருந்து செவிலியர் முதல் உதவி செய்து 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் தலைமை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். எங்கள் மருத்துவமனையில் முழு நேர் மருத்துவர் இல்லை. விபத்து பதிவேடும் பதிவு செய்யவில்லை. இந்த அ.சா-1 அபிகண்ணன் மற்றும் அ.சா-2 சஞ்சை ஆகியோர்களை நான் பார்க்கவும் இல்லை, சிகிச்சை அளிக்கவும் இல்லை. இது தொடர்பாக போலீசார் விசாரணை செய்ய வந்தபோது நான் மேற்படி விவரங்களை சொல்லியுள்ளேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.04 17:30:50 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.